## கிழக்கு மாகாண பொதுச்சேவையின் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர், தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை – 2018

கிழக்கு மாகாண பொதுச்சேவையின் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர், தரம் III பதவிக்கு மாகாண திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தகைமைகளையுடைய கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாக கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 2018.10.29 ஆகும். இப்பரீட்சை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு பின்னர் விரைவில் கிழக்கு மாகாணத்தின் நான்கு நகரங்களில் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் நடாத்தப்படும்.

### 02. ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள் :

2.1. இப்பதவி நிரந்தரமானதாகும். தங்களுக்குறிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வகுக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு தாங்கள் கீழ்ப்படிதல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

2.2. இவ்வறிவித்தலுக்கமைய விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்காக, கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எழுத்துமூல போட்டிப்பரீட்சையொன்று நடாத்தப்படும். இப்பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளினால் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் நேர்முகப்பரீட்சையின் மூலம் விண்ணப்பதாரிகளின் தகைமைகள் பரீசிக்கப்பட்டு, மாகாண திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைபெறும்.

2.3. இந்நியமனம் பெறுபவர்கள் கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும். இந்நியமனம் பெறுபவர்கள் கிழக்கு மாகாணத்தில் 10 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும்.

2.4. மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு விண்ணப்பிக்கும் போது தங்களது விண்ணப்பப்பத்திரங்களை தமது திணைக்களத்தலைவருடாக சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கும் போது மேலே குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுமிடத்து அவரை குறித்த பதவிக்கு விடுவிக்க முடியும் என அத்திணைக்களத்தலைவர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு திணைக்களத்தலைவரினால் சிபாரிசு செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

### 03. சம்பள அளவுத்திட்டம் :

பொது நிர்வாக சுற்றறிக்கை 3/2016 ற்கு அமைவாக. (MN 3-2016)
ரூபா. 31,040 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10 x 750 – ரூபா. 57,550/-

2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் உப அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பளக் கொடுப்பனவு இடம்பெறும்.

### 04. ஆட்சேர்ப்பு செய்வதற்கான அடிப்படைத் தகைமைகள் :

4.1 **வயதெல்லை :**

மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் போது உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

4.2 **கல்வித் தகைமைகள் :**

கல்விப் பொதுத்தராதர (சா/த) பரீட்சையில் சிங்களம் / தமிழ் / ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டு அமர்வுகளிற்கு மேற்படாதவாறு ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4.3 **தொழில்சார் தகைமைகள் :**

(அ) வெலிசர, அனுராதபுரம், அல்லது குண்டசாலை கால்நடை வேளாண்மை பாடசாலையினால் வழங்கப்பட்ட கால்நடை வளர்ப்பு தொடர்பான இரண்டு (02) வருட டிப்ளோமா பாடநெறிச் சான்றிதழ்

அல்லது

(ஆ) அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட கால்நடை வளர்ப்பு தொடர்பான இரண்டு (02) வருட டிப்ளோமா ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்

அல்லது

(இ) மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மேலே குறிப்பிட்ட தொழில்சார் தகைமைக்கு அனைத்து விதத்திலும் சமனான வேறு ஏதேனும் தகைமையை பெற்றிருத்தல்.

4.4 **அனுபவம் :**

கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் ஆரம்ப மட்ட அல்லது அதற்கு மேற்பட்ட சேவை வகையொன்றில் பணிபுரியும் நிரந்தர திணைக்கள மட்டத்திலான பதவியொன்றில் ஆகக்குறைந்தது 05 வருட செயலூக்கமிக்கதும் திருப்திகரமானதுமான சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**குறிப்பு : ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்குரிய எல்லாத் தகைமைகளையும் 2018.10.29 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமாகும்.**

**05. பொதுவான தகைமைகள் :**

5.1. சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

**06. ஆட்சேர்ப்பு முறை :**

6.1. கிழக்கு மாகாணத்தில் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டம் மற்றும் அரச பொது நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் மேலே 2.2 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு செய்யப்படும். அத்துடன் எழுத்துமூல போட்டிப்பரீட்சையின் பெறுபேற்று அடிப்படையில் விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரீசிலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையென தெரியவருமிடத்து இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே எழுத்துப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக தீர்மானிக்கப்படும்.

6.2. நிலவும் வெற்றிடங்களில் 70% திறந்த போட்டிப்பரீட்சை மூலமும், 30% மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மூலமும் நிரப்பப்படும். மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுபவர்கள் நிலவுகின்ற வெற்றிடங்களின் அடிப்படையில் முதலில் நிரப்பப்படுவர் என்பதுடன் மிகுதி வெற்றிடங்கள் திறந்த போட்டிப்பரீட்சை மூலம் நிரப்பப்படும்.

6.3. அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக பதவிக்கு ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் அவசியமானதாகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் கோரப்பட்டுள்ள தகைமைகளுக்குரிய பரீட்சைப் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தவறொன்றாக கருதப்படும் என்பதுடன் தகுதியற்றவர்களின் விண்ணப்பங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**07. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :**

விண்ணப்பப்பத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சை முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண சேவையிலிருந்து நீக்கப்படலாம். மேலே 6.3 பந்தியில் கூறப்பட்ட விடயங்களை விண்ணப்பதாரிகள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**08. பரீட்சைக்கட்டணம் :**

பரீட்சைக்கட்டணம் ரூபா 300/- ஆகும். இக்கட்டணத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் எனும் பெயருக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலகத்தில் பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றினை எதிர்கால தேவைக்காக தன் வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாததுடன் இப்பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது. **அதேபோன்று காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

**09. விண்ணப்பிக்கும் முறை :**

9.1. இவ்வறிவித்தலில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 (21cmx29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களை **மட்டும்** உபயோகித்து, **இல 1.0 தொடக்கம் 5.2 வரை முதலாம் பக்கத்திலும், இல. 5.3 தொடக்கம் 11.0 வரை தாளின் இரண்டாம் பக்கத்திலும்** உள்ளடங்குமாறு விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

9.2. **உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், பிழையின்றி பூரணப்படுத்தப்படாதவையும், மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சைக் குறியீட்டு இலக்கமின்றியும், உரிய திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.** உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு

அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

9.3. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் முன் அனுமானத்துடன் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன், தவறின்றி பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை முன்வைத்த விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். பரீட்சைக்கு அனுமதி அட்டையை பெற்றுக்கொள்ளல் விண்ணப்பதாரி மேற்படி பதவிக்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் என ஏற்றுக்கொள்வதாக கருத முடியாது.

9.4. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் பரீட்சைக் குறியீட்டு இலக்கம் **EX/Rec/18/07** என்பதை குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

9.5. **கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் அலுவலரொருவர் விண்ணப்பிப்பதாயின்,** விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பமானது, திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் முன்னிலையில் இடப்பட்டு அதனை அப்பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் சான்றுப்படுத்தி திணைக்களத்தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

9.6. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018 ஒக்டோபர் மாதம் 29 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப இறுதித்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நீங்கள் அஞ்சல் செய்த விண்ணப்பம் தொலைந்து போனாலோ அல்லது காணாமல் போனாலோ அதற்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. **(விண்ணப்பத்தை செயலாளரின் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.)**

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
198, உட்துறைமுக வீதி,
திருகோணமலை

**10.** விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

i. தேசிய அடையாள அட்டை ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்)
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

**11.** பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு :

| நகரம் | நகர எண் | நகரம் | நகர எண் |
|---|---|---|---|
| திருகோணமலை | 01 | அம்பாறை | 03 |
| மட்டக்களப்பு | 02 | கல்முனை | 04 |

**கவனிக்க :** ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

**12. பரீட்சைத்திட்டம் :**

இப்பரீட்சை இரண்டு (02) வினாத்தாள்களைக் கொண்டிருப்பதோடு இப்பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| வினாத்தாள் | மொத்தப் புள்ளிகள் | நேரம் | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| நுண்ணறிவு | 100 | 01 மணித்தியாலம் | 40% |
| விடயம் தொடர்பான தொழில்நுட்பப் பரீட்சை | 100 | 02 மணித்தியாலங்கள் | 40% |

**நுண்ணறிவு** : இப்பரீட்சை மூலம் விண்ணப்பதாரியின் பகுப்பாய்வுத்திறன், தீர்மானம் எடுக்கும் திறன், கணிதத் திறன் மற்றும் தர்க்கரீதியான சிந்தனை ஆகியன பரீட்சிக்கப்படும்.

**விடயம் தொடர்பான தொழில்நுட்ப பரீட்சை** : இவ்வினாத்தாள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவை பரீட்சிப்பதாய் அமையும்.

i. இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக கால்நடைத் துறையின் பங்களிப்பு,
ii. விலங்குகளின் பாரம்பரிய குணங்களை மேம்படுத்துவதற்காக உலர் வலயத்திற்கு பொருத்தமான இனப்பெருக்க முறைகள்,
iii. பால் உற்பத்திகள் தயாரித்தல்,
iv. புல் வளர்த்தல் மற்றும் அபிவிருத்தி,

v. விலங்குகளின் தொற்று நோய்கள்,
vi. இணைந்த பண்ணை அபிவிருத்தி,
vii. சூழல் பாதுகாப்பான முறைகளில் கால்நடை கழிவு முகாமைத்துவம்,
viii. உலர் வலயத்திற்கு பொருத்தமான கால்நடை வளர்ப்பு முறைகள் போன்ற விடயங்களை உள்ளடக்கிக் காணப்படும்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத விடயங்களில் கருதப்படுகின்ற அல்லது கருதப்படாத ஏதேனும் தெளிவின்மை சம்பந்தமாக மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அதேபோன்று ஏதேனும் விசேட காரணங்களின் நிமித்தமாக குறித்த கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையை நடாத்த முடியாமல் போகும் பட்சத்தில் அது சம்மந்தமாக பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அத்துடன், சேவையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது சம்பந்தமான முடிவு கிழக்கு மாகாண கௌரவ ஆளுநரின் / கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் அறிவித்தலின் பேரில், நியமன அதிகாரியாலேயே தீர்மானிக்கப்படும்.

**ஏ.ஜி.எஸ்.எல்.தென்னகோன்**,
செயலாளர் (கடமையை கவனித்தல்)
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

**EX/Rec/18/07**

மாதிரி விண்ணப்பபடிவம்

(அலுவலக உபயோகத்திற்கு)

## கிழக்கு மாகாண பொதுச்சேவையின் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர், தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை – 2018

***பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :***
தமிழ் - **T**, சிங்களம் - **S**
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்) ☐

***பரீட்சைக்கு தோற்றும் நகர எண் :***
(11 வது பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடுக.) ☐

**நிரந்தர வதிவிட மாவட்டம் :** …………………………………………………………………………………………

1.0. 1.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர்: திரு/திருமதி/செல்வி ………………
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) (உதா : MR.PERERA, A.B.C) ……………………………………………..

1.2. முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : ……………………………………………………………..

1.3. முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : …………………………………………………………………...

1.4. பால் : (பெண் - F / ஆண் - M)
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்) ☐

1.5. தொலைபேசி இல. : ……………………………………………………………………………………..........................

2.0. 2.1. நிரந்தர முகவரி : ………………………………………………………………………………..........................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.2. நிரந்தர முகவரி : …………………………………………………………………………………………........
(சிங்களத்தில்/தமிழில்)

2.3. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி : …………………………………………………………………
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

3.0. 3.1. நீங்கள் இலங்கை பிரஜையாயின், தேசிய அடையாள அட்டை இல.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3.2. பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3. 2018.10.29 ஆந் திகதியில் வயது,

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4.0. இனம் : சிங்களவர் ☐ இலங்கைத்தமிழர் ☐ முஸ்லிம் ☐ வேறு ☐
(உரிய கூட்டினுள் ✓ இடவும்)

5.0. கல்வித்தகைமைகள் :

5.1. க.பொ.த (சா/த) பரீட்சை பற்றிய விபரம் :

I. பரீட்சையின் வருடம் :………………………
II. பரீட்சை சுட்டிலக்கம் :………………………
III. பெறுபேறு :

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5.2. க.பொ.த (உ/த) பரீட்சை பற்றிய விபரம் :

I. பரீட்சையின் வருடம் :………………………
II. பரீட்சை சுட்டிலக்கம் :………………………
III. பெறுபேறு :

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 3. | |
| 2. | | 4. | |

5.3. டிப்ளோமா தொடர்பான விபரங்கள் :

I. நிறுவனத்தின் பெயர் : ……………………………………………………………………………..

II. டிப்ளோமா : ………………………………………..........................................

III. டிப்ளோமா பெற்ற திகதி : ……………………

6.0. நீங்கள் இலங்கை நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா?

அவ்வாறெனின் விபரத்தைக் குறிப்பிடுக. ……………………………………………………………......

……………………………………………………………………………………………………...

7.0. **கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் அலுவலராயின்,**

7.1. தற்போதைய பதவி : ……………..………………………………………………………………..

7.2 திணைக்களம் : ………………………………………………………………….........................

7.3. முதல் நியமனத் திகதி : ………………… 7.4. பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீர்களா ? ஆம் / இல்லை

7.5. இச்சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி : …………………….. 7.6. சேவைக்காலம் : ………….

8.0. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட (தெளிவான விபரங்களுடன்) பற்றுச்சீட்டினை உரிய கூட்டினுள் கழராதவாறு இங்கு ஒட்டவும் தொடர்பான விபரங்கள்

| பற்றுச்சீட்டு மூலப்பிரதியினை கழராதவாறு இங்கு ஒட்டவும் |
|---|

9.0. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப்படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்யமாட்டேன்.

.....……..…...……………………

விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : ……………………

10.0. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :** (இவ்வறிவித்தலின் 9.5 இன்படி)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி ……………………………….. என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ……………………………. ஆந் திகதியில் இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்

உத்தியோகத்தரது கையொப்பம்.

திகதி :……………………….

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்

உத்தியோகத்தரின் முழுப் பெயர் :…………………………….

பதவி :……………………………………………………….

முகவரி :…………………………………………………….

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

11.0 **திணைக்களத் தலைவரின் உறுதியுரை :** (கிழக்கு மாகாண பொதுச்சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கானது)

இத்திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு/திருமதி/செல்வி ….............................................. அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் விண்ணப்பித்துள்ள பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவரை அப்பதவிக்கு விடுவிக்க முடியும் என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும் சரியானவை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

………………………………………

திணைக்களத்தலைவரின் கையொப்பம்

திகதி :……………………

முழுப் பெயர் :……………………………………………

பதவி :…………………………………………………

முகவரி :………………………………………………..

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)